O.S. 10/2020

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:19.02.2026

DW1: நாகராஜ் த/பெ– வீரப்பன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய நான் தான் தகவல் சொன்னேன். நிரூபண வாக்குமூலம் பாரா-10ல் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும், நான் கிரையம் பெற்ற சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கட்சியின் படி வாதியின் சொத்து வேறு எனது கிரைய சொத்து வேறு என்றால் சரிதான். வழக்கு சொத்து விவசாய நிலம் என்றால் சரிதான். அதில் வாதிகள் தற்போது வரை விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் விவசாயம் செய்து வரும் இடத்திற்கு கிழக்கு பக்கம் எனது இடம் உள்ளது என்றால் சரிதான். அதில் நான் விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) தாவா சர்வே எண்.32/3 என்றால் சரிதான். சர்வே எண்.32/3 க்கான UDR பதிவேடு பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 UDR ஆவணத்தின் படி சர்வே எண்.32/3 ல் மொத்தம் 2 ஏக்கர் 52 செண்ட் உள்ளது என்றால் சரிதான், நான் தெற்கு பக்கம் 1 ஏக்கர் 40 செண்ட் கிரையம் பெற்றுள்ளேன். அந்த 2 ஏக்கர் 52 செண்டில் வடபுறம் 1 ஏக்கர் 70 செண்ட் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் அதன் விபரம் எனக்கு தெரியாது. எனது கிரைய பத்திரத்தில் சர்வே எண்.32/3 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3) சர்வே எண்.32/3 ல் தென்பக்கம் 1 ஏக்கர் 42 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 எனது கிரைய ஆவணத்தின் படி சர்வே எண்.32/3 ல் எனது சொத்து வடபுறம் உள்ளது என்றால் சரியல்ல, தென்புறம் உள்ளது. எனது இடத்திற்கு வடபுறம் கிழமேல் தார்ரோடு உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 எனது கிரைய ஆவணத்தில் சர்வே எண்.32/3 ல் வடக்கு மாலாக பட்டம்புதுார் கிராம எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டம்புதுாரில் இருந்து வரும் தார்ரோடு எனது இடத்தின் வடபுறம் அமைந்து உள்ளது என்றால் சரிதான், மேற்படி தார்ரோட்டை நாங்கள் போட்டோம். நான் சொல்வது போல் மேற்படி தார்ரோடு அரசால் அமைக்கப்பட்டது என்றும், நாங்கள் அமைத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய நிலம் வச்சகாரப்பட்டி கிராம எல்லைக்குள் உள்ளது என்றால் சரிதான்.

4) 1955 மற்றும் 1959 ம் வருட மூல ஆவணங்களின் அடிப்படையில் நான் கிரையம் பெற்றதாக எனது கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1955 மற்றும் 1959 வருட ஆவணங்களை பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆக எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களை படித்து பார்த்து தான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களில் சர்வே எண்.32/3 காட்டப்படவில்லை என்றால் சரியல்ல, காட்டப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களில் பைமாஸ் எண்.563 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பைமாஸ் எண்.563 என்பது சர்வே எண்.32/3 என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களின் தரப்பினர்கள் எனக்கு பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களில் கண்ட தரப்பினர்களின் வாரிசுகள் எனக்கு பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுக்கவில்லை என்றும், அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.32/3 ற்கு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டதாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா மேற்படி பட்டா என்றால் சரியல்ல, எனது பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பட்டாக்களில் சர்வே எண்கள்.32/3 ஏ மற்றும் 32/3 பி பட்டாக்களில் எனது பெயர் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது பெயரில் சர்வே எண்.32/3 க்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யக்கோரி வாதிகள் வகையறா சார் ஆட்சியர், அருப்புக்கோட்டை அவர்களிடம் மேல்முறையீடு செய்தார்கள் என்றால் சரிதான்.

6) எனது பெயரில் மோசடியாக பட்டா வழங்கப்பட்டதாக மேற்படி பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் பட்டா ரத்து செய்யப்பட்டது, அதன் மீது மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. அதன் விபரத்தை இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் வழக்கு நிலுவையில் உள்ள போது பட்டா மாறுதல் செய்யப்பட்டதால் அது பற்றி கூறவில்லை. 18.05.2022 ம் தேதி எனது பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்து அருப்புக்கோட்டை சார் ஆட்சியர் உத்தரவிட்டார் என்றால் சரிதான். அதன் விபரத்தை இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் அப்போது வழக்கு நிலுவையில் இருந்தது, அதனால் சொல்லவில்லை.

7) சார் ஆட்சியர் தனது உத்தரவில் சர்வே எண்.32/3 ல் உண்மையான உரிமையாளர்களிடம் இருந்து கிரையம் பெறவில்லை என கூறியுள்ளார் என்றால் அது தவறு. மேற்படி சார் ஆட்சியர் உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், மேல்முறையீடு செய்துள்ளேன். நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் ஆவணங்கள் என்னிடம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்படும் போது பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களின் அசல் நான் வாங்கியிருந்தால் அதன் அசலை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் எனக்கு எழுதிக்கொடுத்த நபர்கள் பி.வா.சா.ஆ. 2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களில் தரப்பினர்களோ, அவரது வாரிசுகளோ இல்லை என்றால் சரியல்ல.

8) பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களில் உள்ள சொத்துக்களும், சர்வே எண்.32/3 சொத்தும் வேறு வேறு என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் புஞ்சை நிலம் என்றும், தவறுதலாக சர்வே எண்.32/3 என குறிப்பிட்டு பி.வா.சா.ஆ.5 ஆவணம் பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ல் கண்ட சொத்திற்கும், தாவா சர்வே எண்.32/3 க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.32/3 வடபக்கம் உள்ள 1 ஏக்கர் 70 செண்ட் தற்போது வரை வாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.32/3 ல் உள்ள சொத்து எனக்கு உரிமை மற்றும் அனுபவம் இல்லை என்றால் சரியல்ல.

9) வாதிகளுக்கு சொந்தமான சர்வே எண்.32/3 ஐ குறிப்பிட்டு நான் பெற்றுள்ள கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வாதிகளின் முன்பாத்தியஸ்தாரரான ராமசாமி என்பவருக்கு தபசில் சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ராமசாமி என்பவர் தனது ஆயுள்காலம் வரை தபசில் சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அவர் காலத்திற்கு பின்னர் வாதிகள் தபசில் சொத்தில் மக்காசோளம் உள்ளிட்ட பயிர்கள் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 07.10.1985 ம் தேதி முதல் சுமார் 40 ஆண்டுகளாக வாதிகள் மற்றும் அவரது முன்பாத்தியஸ்தர்களின் அனுபவத்தில் தபசில் சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல. சர்வே எண்.32/3 ல் எனக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தவறுதலான சர்வே எண் குறிப்பிட்டு பி.வா.சா.ஆ.5 கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளேன் என்றும் மேற்படி கிரைய பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும், வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு கல்வி அறிவு இல்லாததால் வாதிகளின் இடத்தை மோசடியாக நான் கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.